# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 13.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4966/SCIC/2024**

Dr திருமங்கை மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர், ....... பொதுஅதிகார அமைப்பு
அண்ணாநகர் மாவட்டம்,
சென்னை 600 040

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 24.01.2024 |
| 2, | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 06.02.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 16.02.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 15.04.2024 |
| 6. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.10.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 27.01.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், K4, அண்ணாநகர் காவல் நிலையம், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 24.01.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில் CSR எண்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு அதற்கான புகார்

மனுவின் நகல், copy of Annexure IV maintain in the register in the F5 Choolaimedu Police Station with the offences on Senior citizens as per Senior citizen act என்று குறிப்பிட்டு அதுதொடர்பாக 3 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. அவருக்கு பதிலாக திரு கிரிராஜ் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு P. ராஜசேகரன், காவல் உதவி ஆணையாளர், அரும்பாக்கம் சரகம், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரர் 24.01.2024 தேதியிட்டு வெவ்வேறு பொருள் தொடர்புடைய இரண்டு தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுக்களை பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிவிட்டு, ஒரேயொரு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை மட்டும் ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இரண்டு தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுக்களுக்கு இரண்டு முதல் மேல்முறையீட்டு மனுக்களையும், இரண்டு இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களையும் மனுதாரர் அனுப்பிருக்கவேண்டும். அதுகுறித்த விவரம் இன்று மனுதாரர் சார்பில் ஆஜரான நபரிடம் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டது. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரரின் புகார் மனுவானது செயின் பறிப்பு சம்மந்தப்பட்டது என்றும், அதற்கான FIR NO.2242/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். **மனுதாரரின் முக்கிய கோரிக்கை காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் முதியோர் தொடர்பான குற்றங்கள் மற்றும் முதல் தகவல் அறிக்கை (FIR) தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய “2009ம் ஆண்டின் முதியோர் நலவிதிகள்” ன் இணைப்பு (Annexure) 4ல் குறிப்பிட்டுள்ள பதிவேட்டின் நகலாகும். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் ஏற்கனவே 06.02.2024 மற்றும் 15.10.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரர் கோரிய பதிவேடு / (Annexure IV) தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லையென்ற தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேற்படி பதிவேட்டினை காவல் நிலையங்களில் பராமரிப்பது குறித்து காவல்துறையின் உயர் அதிகாரிகளால் அனைத்து காவல்நிலையங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கியிருப்பது தெளிவாகிறது. எனவே, காவல் ஆணையர் அவர்கள் மேற்படி பதிவேடு / (Annexure IV) காவல்நிலையங்களில் பராமரிப்பது குறித்து வழங்கப்பட்ட முந்தைய அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்றினை தற்போது அனைத்து காவல்நிலையங்களுக்கும் அனுப்புமாறு ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது.**

4. **இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரர் கோரிய பதிவேடு / (Annexure IV) தங்கள் அலுவலகத்தில் கிடைக்கவில்லை / பராமரிப்பில் இல்லையென்று தெரிவித்தார். அந்த விவரத்தினைக் குறிப்பிட்டு, பொதுத் தகவல் அலுவலர் பிரமாணப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றினை 31.07.2026 தேதிக்குள் விரைவுத்தபால் மூலம் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அதுகுறித்த அறிக்கையினையும், மேற்படி பிரமாணப்பத்திரத்தினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான**

**அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 07.08.2026 அன்று ஆணையத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4966/SCIC/2024</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
காவல் ஆணையர்,
காவல் ஆணையர் அலுவலகம்,
எண்.132, ஈ.வி.கே சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை 600 007

பொதுத் தகவல் அலுவலர்,
காவல்துணை ஆணையர்,
அண்ணா நகர் மாவட்டம்,
சென்னை 600 040

**மனுதாரர்**
Dr திருமங்கை,
5, அண்ணா காமராஜர் தெரு,
V.M. Foundation, F1,
சூளைமேடு, சென்னை 600 094

TK/PS